**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 28 / 2023**

**வா.சா.3 – செல்வம்** **18.11.2025**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தாவா சொத்தான வாதி குடியிருக்கும் வீடும் நான் குடியிருக்கும் வீடும் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் என்றால் சரிதான். என்னைப்போல் 40 நபர்களுக்கு மேல் தாவா சர்வே எண்ணில் குடியிருப்பதால் அவர்களுக்கு அரசாங்கம் பட்டா வழங்க நடவடிக்கை எடுத்துவருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பூர்வீகம் திருப்புவனம் ஆகும். வாதியின் பூர்வீகம் கொத்தங்குளம் கிராமம் என்றால் சரிதான். வாதி 40 ஆண்டுகளாக தாவா சொத்தில் குடியிருக்கவில்லை கடந்த 10 ஆண்டுகளாக மட்டும் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வழக்கு நிலுவையில் இருந்ததால் வாதிக்கும் மற்ற நபர்களுக்கும் பட்டா வழங்கும் நடவடிக்கை காலதாமதம் ஆனது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் புல எண் 49/2 அதன்பிறகு தற்போது 2023ல் தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தின் சர்வே எண் 49/2 ல் சுமார் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்பதால் தான் பட்டா சம்மந்தமாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதி இந்த வழக்கினை தேவஸ்தானம் மீது தாக்கல் செய்துள்ளாரா வேறு சிலர் மீதும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து உள்ள இடம் மன்னர் குடியிருப்பு என்றால் அது

முழுவதும் மன்னர் குடியிருப்பு கிடையாது நத்தம் நிலமும் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் 49/2 அதன் விஸ்தீருணம் 2 ஏக்கர் 44 செண்டு ஆகும். மேற்படி சர்வே எண்ணில் தான் எனது வீடும் உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் அந்த முகவரி தான் குறிப்பிட்டுள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது முகவரி மன்னர் குடியிருப்பு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 49/2 முழுவதும் மன்னர் குடியிருப்பு என்றும் அது முழுவதும் 4ம் பிரதிவாதி சமஸ்தானத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் நான் வழக்கிற்காக எனது வீடும் அந்த சர்வே எண்ணில் உள்ளதால் கிராம நத்தம் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி குடியிருக்கும் வீட்டின் பாத்தியத்திற்கான ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை. நான் குடியிருக்கும் வீட்டிற்கு ஆவணம் உள்ளதா என்றால் துணை வட்டாட்சியர் 2001ல் பட்டா வழங்கியுள்ளார். நான் குடியிருக்கும் வீடு எனக்கு எப்படி பாத்தியம் என்றால் நான் முத்து என்பவரிடமிருந்து 35 வருடங்களுக்கு முன்பு வெண்ணிலை கிரையம் வாங்கினேன். அந்த வெண்ணிலை கிரைய பத்திரம் எனது வீட்டில் உள்ளது. அந்த வெண்ணிலை கிரைய பத்திரத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனக்கு கிரையம் கொடுத்த முத்து பெயரில் ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. முத்து வீடு கட்டி இருந்தார் அந்த வீட்டை நான் கிரையம் வாங்கினேன். நான் முத்துவிடமிருந்து கிரையம் வாங்கிய பின்பு 4ம் பிரதிவாதி தேவஸ்தானத்திற்கு வாடகை செலுத்தி வந்தேன் என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு வரி ரசீது, மின் கட்டண ரசீது எதுவும் நான்

பார்க்கவில்லை. 2001ல் எனக்கு வழங்கப்பட்ட பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை எனது வீட்டில் உள்ளது. எனக்கு 2001ல் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே தேவஸ்தானம் எனக்கு எதிராக திருப்புவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இதே சர்வே எண் 49/2 சம்மந்தமாக தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 75/2019 வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் அது ஒருதலைப்பட்ச தீர்ப்பு ஆகும். மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகியிருந்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது எ்னறால் சரியல்ல. வா.சா.ஆ.16 விசாரணை அறிவிப்பு 18.02.2025 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பட்டா வழங்குவதற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை